ரஷ்ய உடனுழைப்புடன் புதிய தொழில்கள்

* 289 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ரஷ்ய உதவியுடன் கூடிய தனியார் தொழில் நிறுவனங்கள் தமிழகத்தில் எங்கெங்கு துவங்கப்படவிருக்கின்றன?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இல்லை.

Jurisdiction of Munsiff Courts

* 290 Q.—THIRU S. SANGUMUTHU THEVAR: Will the Hon. the Minister for Industries be pleased to state whether there is any proposal under the consideration of the Government to increase the jurisdiction of District Munsiff Courts from Rs. 5,000 to Rs. 10,000?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இல்லை.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : இப்பொழுது ரூ. 5,000 பெகூனியரி ஜுரிஸ்டிக்ஷன் முன்சிப்களுக்கு என்று இருக்கிறது. இது மிகக் குறைவாக இருக்கிறது. ஆதலால் இன்று இருக்கிற நாணய மதிப்பின் அடிப்படையில் முன்பு நிர்ணயிக்கப்பட்ட அதிகார வரம்பை புனர் பரிசீலனை செய்வதற்கு அரசாங்கம் ஹைகோர்ட்டுக்கு ஏதாவது ஆலோசனை கொடுத்திருக்கிறதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : ஹைகோர்ட்டு அரியர்ஸ் கமிட்டி இப்படிப்பட்ட ஒரு சிபார்சை மத்திய அரசுக்கு தெரிவித்திருக்கிறது. மத்திய அரசு மாநிலங்களின் அறிக்கையைக் கேட்டிருக்கிறது. நம்முடைய அரசின் சார்பிலே இதை ஆதரிக்கிறோம் என்று கூறியிருக்கிறோம்.

Cement lining for irrigation canals

* 291 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(a) whether there are proposals under the consideration of the Government for lining the irrigation canals with cement; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) & (இ) அமராவதி கால்வாயில் இரண்டு பகுதிகளின் (reaches) காரைப்பூச்சு செய்வதற்கு மதிப்பீடுகள் அரசினரால் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளன. இவ்வாறு காரை பூசுவதற்கான ஆரம்பவேலைகள் ஏற்கனவே தொடங்கப்பட்டு இப்பணியானது

1973 மார்ச் 8]

தற்போது முன்னேறி வருகிறது. கால்வாயின் மற்றப்பகுதிகளில் காரை பூசுவதற்கான வேலை மேற்கூறிய இரு பகுதிகளில் காரைப்பூச்சு வேலை முடிவடைந்த பின் எடுத்துக்கொள்ளப்படும்.

ஏற்கனவே காரைப்பூச்சு பூசப்பட்ட கால்வாய்களின் விபரங்கள் பின் வருமாறு :—

(1) வைகைத் திட்டம்—திருமங்கலம் கால்வாய்—17.5 மைல்கள்.

(2) சாத்தனூர் திட்டம்—சாத்தனூர் கால்வாய்—8 மைல்கள்.

(3) மஞ்சளாறு திட்டம்—கால்வாய்—4.5 மைல்கள்.

(4) கல் அணைக்கால்வாய் 2.2 மைல்கள் வெட்டிக்காடு கட்டு கரைப் பகுதி.

(5) கீழ்பவானி பிரதான கால்வாய்—சில பகுதிகள்.

(6) பரம்பிக்குளம் ஆளியாறு திட்டம்—50 ஏக்கருக்கு மேற்படாத நிலங்களுக்கு நீரளிக்கும் கால்வாய் துணைக்கால்வாய்கள்.

(7) சித்தார் பட்டணங்கால் திட்டம்—பட்டணங்கால் ராதாபுரம் கால்வாய்கள். இவற்றைத்தவிர ரூபாய் 60 லட்சம் மதிப்பீட்டில் காலிங்கராயன் கால்வாய்க்கரையை காரைப்பூச்சு செய்வதற்கானத் திட்டம் அரசின் பரிசிலனையில் உள்ளது. வேறு செயற்குறிப்புகள் எதுவும் அரசின் ஆய்வில் இல்லை.

திரு. என். டென்னிஸ்: சித்தார் பட்டணங்கால் திட்டத்திலுள்ள சில கால்வாய்கள் சிமெண்டு பூசப்படவில்லையாதலால், விவசாயிகளுக்கு பலவிதமான கஷ்டங்கள் இருக்கின்றன. அதைப் போக்குவதற்கு அரசு வேண்டிய நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: அதைப்பற்றி பரிசிலனை செய்து முடிவு எடுக்கலாம்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: இப்படி சிமெண்டு பூசி கால்வாயைச் சரிபடுத்துவதிலே நெய்யாறு இடது கரைக் கால்வாயைப் பொறுத்து பல இடைஞ்சல்கள் இருக்கின்றன. கேரள மாநிலம் போதிய அளவில் நமக்குத் தண்ணீர் தரவில்லை. ஆதலால், அந்தப் பகுதியிலே சிமெண்டு பூசுவதற்கு ஏதாவது திட்டமிட்டு அரசு பரிசிலனையில் இருக்கிறதா? அப்படியிருந்தால் அதன் விவரங்களை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: என்னுடைய குறிப்பிலே அந்த விவரம் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் கேள்விகேட்ட பிறகு அதைப் பற்றிப் பரிசிலித்து நடவடிக்கை எடுக்கலாம்.

[1973 மார்ச் 8

திரு. ஏ. ஆர். சுப்பையா : நவீன வாட்டர் மேனேஜ்மெண்டு அடிப்படையில் பிராஜக்ட்களின் கீழ் புதுக் கால்வாய்கள் அமைக்கப்படும்பொழுது இந்த லைனிங் திட்டத்தை வகுப்பதற்கு வழி வகுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அதைப்பற்றி விவரம் தற்பொழுது என்னிடம் இல்லை.

திருமதி த. ந. அனந்தநாயகி : இப்படி காரை பூசுவது என்பது எப்பொழுதிலிருந்து அரசு முடிவு எடுத்து அந்த வேலையைச் செய்து வருகிறது. அதன் மூலம் எவ்வளவு தண்ணீர் லாபம் கிடைக்கிறது என்று ஏதாவது கணக்கு இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : சுமார் நான்கில் ஒரு பங்கு தண்ணீர் மிச்சப்படும் என்று சொல்கிறார்கள். அந்த அடிப்படையில் தான் காரை பூசம் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. பழைய கால்வாய்களைத் தூர் வாரவேண்டிய நிலைமையிலும், பழைய கால்வாய்களைச் செப்பனிடும் நிலைமையிலும் இந்தப் பணியைச் செய்வதினால் விவசாயிகளுக்கு முறையாகத் தண்ணீர் கிடைப்பதற்கு நல்ல வாய்ப்பு ஏற்படுகிறது.

திரு. எஸ். முருகையன் : சாத்தனூர் பாசனக் கால்வாய்கள் 8 மைல் தூரத்திற்கு சிமெண்டு பூசப்படும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள் பாசனக் கால்வாய் 20 மைல் தூரத்திற்கு நீடிக்கப்பட்டிருக்கிறது. கடைசிப் பகுதிகளில் சரியாகத் தண்ணீர் வரவில்லை என்ற குறைபாடு இருந்துகொண்டிருக்கிறது. அதற்கான திட்டம் ஏதாவது இருக்கிறதா? இல்லையென்றால், உடனடியாக இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு மீதிப் பகுதிகளிலும் சிமெண்டு பூசுவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : நான் சொல்லியிருப்பது 8 மைல் தூரத்திற்கு ஏற்கனவே காரை பூசப்பட்டிருக்கிறது. மேற்கொண்டு இருக்கிற கால்வாய்களுக்குப் பூச திட்டம் தற்பொழுது இல்லையென்றாலும், இது போன்ற திட்டங்களைப் பரிசீலிக்கவேண்டும் என்று தலைமைப் பொறியாளர் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்.

திரு. கு. காமாட்சி : பல பாசனக்கால்வாய்களில் லூஸ் ஸாயில், அதாவது ஈமை மணலாக இல்லாத காரணத்தினால், அதிகத் தண்ணீரை முதலில் இழுத்து விடுகிறது. இப்படி இழுப்பதை நிவர்த்திக்கும்பொருட்டு, அடியிலே ரிவெட்மெண்டு, கல் பரப்பி, காரை பூசி தண்ணீரை மிச்சப்படுத்துவதற்கு வழிவகைகளை அரசாங்கம் மேற்கொள்ளுமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இந்த அடிப்படையிலேதான் இதுபோன்ற திட்டங்கள் ஆராயப்படுகின்றன.

திரு. ஏ. எம். இராஜா : காலிங்கராயன் கால்வாயில் ரூ. 60 லட்சம் செலவில் காரை பூசும் திட்டம் ஆராய்ச்சியில் இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அது எப்பொழுது செயலில் வரும்? தடப்பள்ளி, அரக்கன் கோட்டை கால்வாய்களுக்கு காரை பூசும் திட்டம் பற்றி செயற் குறிப்பு இருக்கிறதா? அது எப்பொழுது செயல்படுத்தப்படும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : காலிங்கராயன் கால்வாயைப் புதுப்பிப்பதற்கான திட்டம் பற்றி தலைமைப் பொறியாளர் ஆலோசனை சொல்லியிருக்கிறார்கள். வருவாய்த் துறையை கலந்து ஆலோசித்த பிறகு, இது பற்றி ஒரு முடிவு செய்யப்படும். மற்ற இரண்டு கால்வாய்கள் பற்றி, அரக்கன் கோட்டை, தடப்பள்ளி பற்றி தலைமைப் பொறியாளர் அறிக்கை அனுப்பும் படி கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்.

திரு. தோப்பூர் திருவேங்கடம் : மழையினாலும், வெள்ளத்தாலும் பல கால்வாய்கள் அதிகமாகப் பாதிக்கப்பட்டிருக்கின்றன. ஆகையால் ஒவ்வொரு மாவட்டத்திலும் இதைப்போன்று சிமெண்டு பூசி கால்வாய்களைப் புதுப்பிக்கின்ற திட்டத்தை அரசு ஏதேனும் புதியதாகத் துவக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : ஆங்காங்கு இருக்கின்ற திட்டங்களை அனுசரித்து இதைப்போன்று பல கால்வாய்களில் இப்படிப்பட்ட பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. மாவட்ட வாரியாக இதைப்பற்றிப் பரிசீலிக்கலாம்.

அமராவதி ஆற்றின் குறுக்கே பாலம்

* 292. வினா—திரு. வா. மை. அப்துல் ஜப்பார் : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராசபுரம்-அரவக்குறிச்சிக்கிடையில் அமராவதி ஆற்றின் மீது பாலம் ஒன்று கட்டும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா?

(இ) ஆம் எனில், வேலை எப்போது துவங்கும்?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) செயற்குறிப்பு பரிசீலனையில் உள்ளது.

(இ) அரசு ஒப்புதல் அளித்தபின் வேலை துவங்கும்.